உ

ஸ்ரீகணேச சாரதா சற்குருப்யோ நம:

தஞ்சை ஸ்ரீ குப்புசுவாமி ராஜூவென்னும்

பூர்வாச்சிரம நாமம்பூண்டிருந்த

# ஸ்ரீ பிரமாநந்த சுவாமிகளின்

# தோத்திரப்பா.

இது

மேற்படி சுவாமிகளின் அணுக்கத்தொண்டராகிய

**ஸ்ரீ சரவண சுவாமிகளால்**

பாடப்பட்டது.

T. 6489

கும்பகோணம்

யதார்த்தவசனீ அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது.

**1932.**

விலை **2** அணா.] [காபிரைட் ரிஜிஸ்டர்டு.

I
954

உ

ஸ்ரீகணேச சாரதா சற்குருப்யோ நம:

தஞ்சை ஸ்ரீ குப்புசுவாமி ராஜுவென்னும்

பூர்வாச்சிரம நாமம்பூண்டிருந்த

## ஸ்ரீ பிரமாநந்த சுவாமிகளின்

# தோத்திரப்பா.

இது

மேற்படி சுவாமிகளின் அணுக்கத்தொண்டராகிய

**ஸ்ரீ சரவண சுவாமிகளால்**

பாடப்பட்டது.

கும்பகோணம்


யதார்த்தவசனீ அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது.

1932.

விலை 2 அணா.]

[காபிரைட் ரிஜிஸ்டர்டு.



தஞ்சை ஸ்ரீ குப்புசுவாமி ராஜூவென்னும்
பூர்வாச்சிரம நாமம்பூண்டிருந்த
**ஸ்ரீ பிரமாநந்த சுவாமிகள்.**

# சிறப்புப்பாயிரம்.

## நேரிசையாசிரியப்பா.

திருவளர் *ஆந்திர தேசசத் திரிய
†விருதநற் குலத்து வேங்கட ராஜ‌ன
நிறைவேங் கடகிரி நெடுமால் வரத்தால்
குறைவறப் பெற்ற குப்புசா மிப்பெயர்ச்
சற்குண சீலன் தான்பல பாஷையில்
விற்பன னாகி விளங்கிநற் றஞ்சைப்
பதியினில் விட்டுணு பாவா அருள்நெறி
விதியுற அடைந்து விவாகமுஞ் செயப்பெற்
றுசிரி யன்றன் ஆகிக் கலைமுறை
பேசிநின் றிந்தி பெருவட மொழியில்
ஞானநல் நூல்பல நனிமொழி பெயர்த்தே
தானரும் தமிழிற் றந்தனன் தாய்பிதா
‖மனைகடன் தீர்த்தே வானப் பிரஸ்தம்
தனையடைந் துண்மைத் தனிநலங் கண்டே
கனந்தரு சேது கன்னியா குமரி
அனந்த சயனம் அழகிய சனார்த்தனம்
வெப்பிலாத் தலைக்கா விரிபாகு மண்டலம்
சுப்பிர மண்ணியம் சூழ்மஞ்சு நாதம்
உடுப்பிகோ கர்னம் உயர்பண் டரிபுரம்
வடுப்படாப் பஞ்ச வடிதிரி யம்பகம்
தருபுஷ் கரம்உச் சைனியோங் காரம்
நருமதை சோம நாதம் துவாரகை
திரவபாஞ் சாலம் சிந்துவே அமிர்த
சரசுசா ரங்கம் தனிஅரித் துவாரம்
*இரவில்தே வப்பிர யாகை உருத்திரப்
பிரயா கைத்தலம் பின்குப்த காசி
†நவுதலில் திரியுக நாரா யணபதம்

---

*ஆந்திர = தெலுங்க. †விருத = விருதையுடைய. ‖மனை = மனைவி.
*இரவுஇல் = யாசித்தல்இல்லாத. †நவுதல்இல் = தளரல் இல்லாத.

கவுரி குண்டம் கனகோப் பீசுரம்
§இரலைநந் தப்பிர யாகை விட்டுணுப்
பிரயா கைப்பதம் பெருமைசேர் பதரி
நாரா யணம்தனை நாடியே பிண்டம்
பேரா திடும்நற் பிரம கபாலம்
நலவசு தாரைகர் ணப்பிர யாகை
♆அலமுறு நைமிசா ரண்ணியம் இலட்சு
மணபுரி அயோத்தி மகிழ்கர் னன்புரம்
‡எணல்திரி வேணி எனும்பிர யாகை
¶எயாவா ராணசி என்றிடு காசி
கயாவுடன் காளி கட்டமே தாட
கேசுரத் தோடு கிளர்புவ னேசுரம்
‖தாசுரர் சகநா தங்கோ தாவிரி
கிருட்டிண வேணி கிளர்கா ளத்தி
அருட்டிரு வேங்கடம் அருணை சிதம்பரம்
மன்னிரா மேசுரம் மதுரையாத் திரையாய்த்
தன்னிலைத் தஞ்சை சார்ந்தனன் முன்னுறும்
அரித்துவா ரத்தின் அமர்மே ளாவில்
தரித்துடந் யாசம் தான்செயக் கண்டு
மகந்துவோ ரைவர் மகிழ்ந்துநின் நாமம்
*நகம்புகழ் பிரமா நந்தனென் றுரைக்கப்
பெற்றனன் முன்னும் பின்னும் யாத்திரை
முற்றவுந் தனைவிடா மொய்நிழல் போலத்
தொடர்ந்துமெய்ச் சீடனாய்த் தூயஅன் பினனாய்
நடந்திடு சரவண நாமத் தவற்குக்
கங்கைக் கரையிற் கனிந்துப தேசம்
அங்கை நெல்லிபோல் அருளிப் பலதலம்
பிறவுஞ் சென்று பேருல கத்தே
திறவுப காரஞ் செய்து மவுனநல்

---

§இரலை = மான். ♆அலம் = போதும் எனும் அமைவு.
‡எண்நல் = தியானிக்கின்ற நல்ல. ¶எயா = இளையாத.
‖தாசுரர் = தாண்டுகின்ற தேவர். *நகம் = பூமி.

நிலையடைந் தருள்நெறி §நிறுவி அறிஞர்
தலைவனாய்ச் சிக்கத் தம்பூர் அதனில்
விதேக முத்தி மேவிட இனிதே
†தமேதகத் தியானத் தாற்செயுங் கிரியை
செய்துநல் லன்பர்கள் திரவிய சகாயம்
எய்திநற் சமாதிக் கெழில்மிகும் ஆலயம்
மாமதில் நந்தன வனத்துடன் அமைத்துத்
தாமதி யாது தகுதியாம் பூசனை
நித்தியம் நடக்கவும் நிகழ்குரு பூசை
பத்தியாய்ச் செய்யும் பாங்கெலா மியற்றி
முன்சொலும் தன்குரு மூர்த்தி யாகிய
நன்குயர் பிரமா நந்தனே சிகன்மேல்
*சதமெனும் எண்ணில் தனிவிளங் கிடவே
பதமுறு தோத்திரப் பாவை யுரைத்தனன்
அன்னோன் சீடனா யமைந்துள
தன்னோர் சரவண சாமிமெய்த் தவனே.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீரமர் இராம சந்திர சாமி சீடனும் விட்டுணு சாமி
§நாரமை அவன்மா ணாக்கனும் பிரமா நந்தநற் சாமிஅன் னவனைச்
சாரடி யானும் சரவண சாமி தன்குர வனுக்குநற் கோவில்
சீரதோத்திரப்பாஅமைத்தனன்புரட்டாசியிற்குருபூசைபூரணையே.

இங்ஙனம் அடியார்க்கடியார்
**திருப்பதி சுவாமிகள்,**
கருவூரைச்சேர்ந்த அரவக்குறிச்சி.

---

§நிறுவு = ஸ்தாபித்து. †தமேதக = அதே ஒருமை
*சதம் = நூறு. §நார் = அன்பு.

உ

# சாற்றுக்கவிகள்.

I

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருந்துபல் வளங்கள் மல்கித்
திகழ்தரு தஞ்சை தன்னிற்
பெருந்தகைக் குரவ னாகப்
பிறங்கிய பிரமா னந்தற்
கருந்தனித தோத்தி ரப்பா
வமைத்தன னன்பின் மிக்க
வரந்தரு சரவ ணப்பேர்
வாய்ந்தநற் சீடன் றானே.

**நீலகண்டசிவம்,**
சோதி ஆச்ரமம், சிதம்பரம்.

---

II

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூமலி தஞ்சைப் பதியமர்ந் துலகு
புகழமெய்க் கலைநெறி பயின்று
நாமலி குப்பு சாமியாம் முற்பேர்
நண்ணிமெய் யறிஞராற் பின்சார்
தூமலி பிரமா நந்தமெய்ப் பெயரோன்
தோத்திரப் பாநனி யுரைத்தான்
ஆமலி யன்னோற் கினியசற் சீடன்
ஆம்சர வணமுனி வரனே.

இங்ஙனம்

ஸ்ரீசுயம்பிரகாசசுவாமிகள் பரம்பரையில்
திருவையாற்றில் எழுந்தருளி இருந்த
ஸ்ரீசிவாநந்தசுவாமிகள் மாணாக்கருள் ஒருவராகிய
கருவூரைச் சேர்ந்த நல்லமாகாளிப்பட்டி
**சு. தெய்வசிகாமணி குருக்கள்.**

## III

மாத வத்து மகிபர்கள் வாழ்வுறப்
போத லர்ந்த புனற்றடத் தஞ்சையின்
வேத நான்கும் விளம்பும் பெரும்பொருள்
மேத கும்பத மேவிய சீர்த்தியார். (க)

வெம்மை யோட விரிந்த அசிபதச்
செம்மை சேர்குப்பு சாமிமெய்த் தேசிகர்
தம்மை யண்மித் தனிமுதற் பீடரா
யம்மை நற்பய னுய்ந்த பெருமையார். (உ)

உள்ள யாவு மொருபர மென்னவே
விள்ள ஞானம் விரவி யுணர்ந்தவர்
தள்ள ருஞ்சீர்ச் சரவண நற்றவர்
கொள்ள வின்பங் குவலயம் முற்றுமே. (ந)

மிக்க தங்குரு வாம்பிர மாநந்தர்
பக்க லன்புடன் பாடிய மாலையீ
தொக்க மாண்பி னுயரிய தோத்திரம்
நக்க ஞருளா யாக நவில்வமே. (ச)

அருள்வி ராவுமிவ் வாரிய நூலினைப்
பொருள்வி ராவும் புராதன நூலென்ப
மருள்வி ராவுமிம் மானிட ரோதினல்
தெருள்வி ராவித் திகழ்வர்நற் போகமே. (ரு)

**ப. அ. முத்துத்தாண்டவராயன்,**
ஸ்ரீகாழி.

---

## IV

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வளங்கள்பல வுஞ்சேர்ந்து மன்னியுறை
தஞ்சைநகர் வாழ்ந்த சீமான்
துளங்கலிலாச் சித்தத்தான் சொரூபநிலை
செறிபூமான் சேர்ந்தார் தம்மைக்

களங்கமறச் சிவமாக்குங் கருணையினு
னென்றனக்குங் கருணை செய்தான்
விளங்கறிவா நந்தகுப்புச் சாமிபிர
மாநந்தன் விமல பாதம். (1)

போற்றியருள் பெற்றுயர்ந்தான் பூரணமா
நிலைகண்டான் புகழ்ம றைக்கான்
றோற்றியநற் சரவணசு வாமியெனும்
வேதாந்தி துன்னு மன்பால்
ஏற்றுபிர மாநந்த சுவாமிகள்தோத்
திரப்பாவை யிணைக்க மாகச்
சாற்றிமன நிறைவுற்றான் றக்கோரெல்
லாம்புகழத் தகவாய் மாதோ. (2)

**இலக்கண இலக்கிய**
**தர்க்க வேதாந்த போதகாசிரியர்**
கோ. வடிவேலு செட்டியார், சென்னை.

உ

ஸ்ரீகணேசசாரதாசற்குருப்யோ நம:

# ஸ்ரீபிரமாநந்தசுவாமிகளின் தோத்திரப்பா.

மங்கலம்.

சிவனெழிற் கணேசன் றேவி திருவமர் விண்டு பாநு
அவமினற் பெரியோர் பாத மன்பொடு முளத்திற் கொண்டு
தவமிலா மனத்தி னேனைத் தடுத்தருள் செய்ய வந்த
உவமையில் பிரமா நந்தர் தோத்திர முரைக்க லுற்றேன்.

அவையடக்கம்.

மங்குடைப் புத்தி யுள்ளான் மாற்றமா மிஃதென் றெண்ணி
இங்குள பிழைக ளெல்லாம் இயற்கைய வெனவே விட்டுத்
துங்கநற் பிரமா நந்தர் தோத்திர மென்றுட் கொண்டு
பொங்குபே ரளியான் மேலாப் போற்றுவர் சான்றோ ராவர்.

நூல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

போற்றிய நடன ராசன் பொருவிலா வுருவந் தானே
ஏற்றமார் குரவ னாக வித்தல த்துதித்த தென்னச்
சாற்றிடத் தோன்றி யென்றன் சழக்கெலா மாற்றி யாண்ட
ஏற்றமாம் பிரமா நந்த னிணையடி தொழுதல் செய்வாம். (1)

அங்கணன் கைலை தன்னி லருளிய வுண்மை தோன்ற
நங்குருப் பிரமா நந்த நாயக நாமந் தாங்கி
இங்கொரு வடிவாய் வந்தா னெம்மனோர்க் கருள வந்த
துங்கமெய்ப் பொருளான் பாதத் துணைமலர் தொழுதல் செய்வாம்.

சத்திய ஞான னந்தத் தனிப்பெருஞ் சுடரே மேலாந்
தத்துவ முணர்த்து தற்குச் சற்குரு வடிவந் தாங்கி
மெய்த்தனிப் பிரமா நந்த மிளிர்பெயர் பூண்டு வாழ்ந்த
தத்தனி ஞான மூர்த்தி அடிமலர் துதித்தல் செய்வாம். (3)

எந்தமெய் யின்பச் சோதி யென்றனக் கருள விங்குச்
சுந்தர மேனி தாங்கித் தோன்றிய தாமோ அந்த
அந்தமி லின்பச் சோதி யாகிய பிரமா நந்தன்
பந்தம தொழிக்கு மேன்மைப் பதமலர் போற்றி வாழ்வாம்.

தஞ்சமென் றடைந்த மாந்தர் சனனநோய் தீர்த்திங் கன்னோர்
எஞ்சலி லின்ப வீட்டை யெளிதினி லெய்த வேண்டித்
தஞ்சையிற் பிரமா நந்தத் தனிப்பெயர் தாங்கி வந்த
வஞ்சமில் குருவே யுன்றன் மலரடி போற்றி போற்றி. (5)

அந்தம தில்லாத் தூய வநாதியாம் பிரமந் தானே
நந்தலில் பிரமா நந்த நாயக னாகித் தோன்றிக்
கந்தமு மலரும் போலக் கழலிணை பிரியா வண்ணந்
தந்தருள் புரிந்த தந்தத் தனிமுதற் பாதம் போற்றி. (6)

மூவகைத் தேக மென்பால் முனைத்திடா தொழிய விந்த
மூவகை யவத்தை கட்கு முன்னுறு சாட்சி நீயாய்
ஆவது செய்க வென்றே யருளிய பிரமா நந்த
தேவனற் றூய பாதத் தேமலர் போற்றி வாழ்வாம். (7)

மாலொடு வஞ்ச மாய மன்பதை யுலகில் வந்து
மாலொடு பிரமன் காணு மலரடி மனத்தி ருத்தி
மாலொடு வஞ்ச மிக்க மனமெனக் கொழியச் செய்த
மாலிலாப் பிரமா நந்தன் மாண்பமர் பதங்கள் போற்றி. (8)

அஞ்சுமா முகத்தோ னனை வரன்மிகு கருணை கூர்ந்தே
அஞ்சுமா பாச மென்பா லழிதரப் பிரமா நந்த
விஞ்சிய பெயரோ னாகி மேதினி வந்தா னன்னான்
கஞ்சநேர் தூய வாய கழலிணை போற்றி போற்றி. (9)

ஞானகம் மியத்த தீத நற்பரப் பிரமா நந்தன்
ஈனமாங் கலைக ளின்றி யிழிமல மின்றுச் சாந்தம்

ஆனவப் பிரமந் தன்னி லமர்ந்திட வைத்தே யென்றன்
ஈனம தொழியச் செய்தா னிணையடி யேத்தி வாழ்வாம்.

எந்தவோ ரளவைக் கெட்டா திலகிடு சித்தே யன்பால்
எந்தமைக் காக்கும் வண்ண மெழிலுருக் கொண்டு வந்த
தந்தநற் பிரமா நந்த னமலமெய்ப் பாதந் தன்னைப்
பந்தம தொழித்து வாழப் பணிவுடன் மனத்திற் கொள்வாம்.

நலமிலிந் நாம ரூப வவித்தையை நாச மாக்கிச்
சொலவிலாச் சிவாய சற்சிற் சுகவடி வாகும் வண்ண
நலமெலாம் வாய்ந்து நின்ற நங்குருப் பிரமா நந்தன்
பலனுரு வாகச் செய்த பதமலர் போற்றி போற்றி. (12)

அந்தமி லின்பந் தன்னை யடியர்யாம் பெறுதற் காகக்
கந்தமிக் குடைய சோலைக் கவினுறு தஞ்சை வாழ்ந்த
பந்தம தொழிக்கு மெங்கள் பண்புடைப் பிரமா நந்தன்
சந்தமார் தூய பாதத் தாமரை போற்றி போற்றி. (13)

அந்தமோ டாதி யில்லா தாகிய பிரமந் தானே
எந்தமக் கருள வேண்டி யித்தல மதனில் வந்து
தொந்துவ மொழிததுச் செவ்வே சுகவடி வாகச் செய்த
தந்தநம் பிரமா நந்த னடியிணை துதித்து வாழ்வாம். (14)

சங்கமற் றொளிரா நின்ற சச்சிதா னந்தந் தானே
அங்கம துடைத்தா யிங்கே யன்புடைக் குரவ னாகி
இங்கெழுந் தருளிற் றென்றே யின்னடி யார்கள் போற்றும்
எங்குருப் பிரமா நந்த னெழின்மிகு மலர்த்தாள் போற்றி.

எந்தவோர் வடிவு மின்றி யிலகிடு பிரமந் தானே
சுந்தர வடிவாய்த் தோன்றித் துதிபெறு பிரமா நந்தச்
சுந்தர னுயிற் றந்தத் தூயவன் பாதப் போதை
எந்தம்வெவ் வினையை நீக்க விறைஞ்சியே துதித்து வாழ்வாம்.

தத்துவா தீத மான தனிப்பர மான்மாத் தானே
தத்துவ முணர்த்து தற்குச் சற்குரு வடிவ மாக
இத்தரை தன்னில் வந்த தெழில்கொளப் பிரமா நந்தன்
சுத்தமாம் பாதப் போதைச் சுகித்திடத் துதித்து வாழ்வாம்.

சுத்தசை தன்ய மான சொரூபமே யெக்கால த்தும்
மெத்தவும் விளக்க மாக விளங்கிடச் செய்யும் வண்ண
மித்தல மதனில் வந்தே யெளிதினி லறியச் செய்த
வித்தகப் பிரமா நந்தன் விரிமலர்ப் பாதம் போற்றி. (18)

என்னைத்தான் தடுத்தாட் கொண்டு மெனக்கொரு கேடு மின்றி
தன்னது கருணை யாலே தகுபிர மானந் தத்தை
என்னது சொரூப மாக எனக்கெளி துணர்த்திப் போந்த
தன்னைநேர் பிரமா நந்தன் சரணங் டலைமேற் கொள்வாம்.

பஞ்சமா பாவந் தன்னைப் பாறிடச் செய்தற் காகப்
பஞ்சவக் கரத்தி னர்த்தம் பண்புட னுணர்த்த வந்த
தஞ்சைவாழ் குரவ னாகுந் தனிப்பெரும் பிரமா நந்தன்
கஞ்சநாண் மலரே யன்ன காமர்பொற் றாள்கள் போற்றி.

பூரணப் பரமான் மாவே புகழ்பெறு பிரமா நந்தப்
பூரண னாகி யிந்தப் பூதல மதனில் வந்து
பூரணப் பிரம மென்னப் புகன்றிடு வாக்கி யத்தால்
பூரண மாகச் செய்த புகழினைப் போற்றல் செய்வாம். (21)

கருணைகூர் நோக்கா லென்னைக் களங்கமில் பிரமத் தோடு
மருவியே நிற்க வைத்து மற்றினித் திரும்பா வண்ணம்
பரமொடிவ் விகத்தின் போகப் பற்றினை நீங்கச் செய்த
பரமநற் பிரமா நந்தன் பண்புள பதங்கள் போற்றி. (22)

சங்கர வுருவ நீத்துச் சமைந்தவோர் வெண்மை செம்மை
சங்கரப் படிக வண்ணச் சரீரம துடையோ னாகி
இங்கெழுந் தருளி வந்த எங்குருப் பிரமா நந்தன்
பங்கய மலர்பொற் றாளைப் பணிவுட னுளத்திற் கொள்வாம்.

சுத்தநற் குரவ னாய தூயவோர் பிரமா நந்தன்
நித்திய விமல மாகி நிகழ்வுறு பிரமந் தன்னை
தத்துவ விலக்கி யத்தால் சார்ந்திடச் செய்திங் கென்னைச்
சுத்தனாய் வைத்தா னன்னோன் துணைமலர்ப் பாதம் போற்றி.

சொப்பிர காச மாகத் துலங்கிடு பிரமந் தானே
ஒப்புயர் வின்றி யிங்கே யுயர்தரு பிரமா நந்தத்

திப்பிய னுகத் தோன்றிச் சிறப்புடை யின்பந் தன்னை
இப்புவிக் களித்த தன்னே னெழின்மலர்ப் பாதம் போற்றி.

ஞானமா மார்க்கந் தன்னை நன்குற வடைய விங்கு
ஞான நூல் பழகச் செவ்வே நங்குரு பரனுய் வந்து
ஞான நூல் தன்னை யெல்லா நலமுட னுணரச் செய்த
ஞானியாம் பிரமா நந்த னளிமலர்ப் பாதம் போற்றி. (26)

சுத்தசின் மயம தாய தூயமா வாக்கி யத்தால்
சுத்தமா முபதே சத்தைச் சுகமுட னுணர்த்த வந்த
சுத்தமாம் பிரம மாய துதிபெறு பிரமா நந்தன்
சுத்தமாட் பாதந் தம்மைத் துதித்துநம் மனத்திற் கொள்வாம்.

அஞ்சன மென்னு மாலா லாகிய தற்போ தத்தை
அஞ்சுக மொழியால் நீக்கி யழிதரக் கருணை செய்து
சஞ்சல மொழியு மாறு சன்மய மடைய வாக்கும்
தஞ்சைவாழ் பிரமா நந்தன் தனிச்சரண் போற்றல் செய்வாம்.

ஒருவனு யென்று மிக்க வொழிவுள விடத் திருந்து
பிரமமா மமுதந் தன்னைப் பெட்புட னடையச் செவ்வே
உரமதா ஞானந் தன்னை யுதவிய பிரமா நந்தன்
திருவடிக் கமலந் தம்மைச் சிரத்தினுக் கணியாச் செய்வாம்.

துங்கவப் பிரமந் தானே தூயவோர் பிரமா நந்த
நங்குரு வடிவங் கொண்டு நடலையின் மூழ்கு வேனை
யங்கணுற் புரக்க வந்த தத்தனிப் பொருளின் பாத
மங்கல மாக நெஞ்சில் வயங்கிடச் செய்வா மன்றே. (30)

அஞ்சியே தன்பால் வந்திங் கடைந்தவர்க் கருள வேண்டி
அஞ்சுமா முகங்க ரந்தே யழகுறு முகத்த னுகி
அஞ்சலென் றபயந் தந்தே அன்பினு லவரைக் காத்த
அஞ்சொலார் பிரமா நந்த னரியபொற் பாதம் போற்றி. (31)

வித்தக வேதாந் தத்தின் மிளிர்மகா வாக்கி யத்தால்
சுத்தமா மேனி தாங்கித் துன்பம தொழியச் செவ்வே
சுத்தமாம் பிரம மாகத் துலங்கிடச் செய்ய வந்த
அத்தனும் பிரமா நந்த னடிமலர் முடிமேற் கொள்வாம். (32)

இன்புறு வடிவ மாக விலங்கிடு பிரமா நந்தன்
இன்புறு வாக்கி யத்தா லென்றனக் கருளி யிங்கே
இன்புரு வாகச் செய்த வியல்பினை யேத்தி மேலாம்
இன்புறு பதும பாத மிதயத்தில் பளிர வைப்பாம். (33)

தருக்கில்சாங் தோக்கி யத்தில் தத்துவ மசியென் றோதும்
பொருத்தமா யுள்ள விந்தப் புகழ்பெறு வாக்கி யத்தால்
பெருக்கமார் பிரம மாகிப் பேரின்ப மடையச் செய்த
திருக்குரு பிரமா நந்தன் றிருவடிக் கமலம் போற்றி. (34)

போற்றியென் பிரமா நந்த பிழைபினைத் தீர்த்தாய் போற்றி
போற்றியென் பிரமா நந்த பொய்மையைத் தீர்த்தாய்போற்றி
போற்றியென் பிரமா நந்த புன்மலம் தீர்த்தாய் போற்றி
போற்றியென் பிரமா நந்த பிறவிநோய் தீர்த்தாய் போற்றி.

சச்சிதா நந்தந் தானே சற்குரு வடிவாய் வந்தாங்
கிச்சக மதனி லுற்ற வெங்குருப் பிரமா நந்த
விச்சக நாம ரூப மெழுந்திடா தொழிய விங்கே
சொச்சமாம் வாக்கி யத்தால் தூய்துறச் செய்தாய் போற்றி.

எவருடை யருளி னாலே யிருண்மல மிரிந்து போமோ
எவருடை யினிய சொல்லா லிருதயக் கிரந்தி போமோ
எவருடை யினிய நோக்கா லின்பம் வந்தெய்த லாமோ
அவரெனும் பிரமா நந்த ரடியிணை துதித்து வாழ்வாம். (37)

வரமிகு பிரமா நந்தன் வாழ்வுற வந்தே யிங்கு
வரமிகு ஞானந் தன்னை மாண்பிலேம் பாசம் நீக்க
வரமிகு வாக்கி யத்தால் வயங்கிடச் செய்தா னன்னோன்
வரமிகு பாதப் போதை வாழ்த்துவேன் மனதி லென்றும்.

துளக்கமின் மனத் தினாலே தூர்ப்புத்தி கொண்ட வென்னை
விளக்கது தன்பால் வந்து மேவிய திரியைத் தன்போல்
விளக்கென விளங்கச் செய்யும் விதமெனத் தானே யாக்கு
மளக்கலில் பிரமா நந்த னடிமலர் துதித்து வாழ்வாம். (39)

இரகசி யப்பே செய்து மிப்பிர மத்தை மிக்க
உரமொடு தியா கஞ் செய்தா லுயர்வுறு முத்தி தன்னை

உரிமையா யடைவா யென்றே யுண்மையா முபதேசத்தை
உரைசெயும் பிரமா நந்த னொளிமலர்க் கழல்கள் போற்றி.

பாதக மொழிக்கும் வேலை பரமநன் ஞேன்பாக் கொண்ட
சூதிலாப் பிரமா நந்தன் சுருதிபி னந்த மான
நாதமா மோங்கா ரத்தால் நன்மன முடையோர்க் கிங்கே
பாதக நீங்கச் செய்தான் பண்பம ரவன்றாள் போற்றி. (41)

எந்தர முணர்ந்தி ருந்து மிணையடி முடிமேல் வைத்தே
எந்தம திடரைத் தீர்க்க வெழின்மறை வாக்கி யத்தா
லந்தமில் பிரமந் தன்னில் அமர்ந்திட வெம்மைச் செய்த
அந்தநற் பிரமா நந்த னடிமலர்க் கன்பு செய்வாம். (42)

பங்கமார் மலங்க டம்மைப் பாறிடச் செய்தற் காக
எங்குமாய்ச் சத்தாய்ச் சித்தா யிருந்திடு பிரமந் தன்னை
மங்குறு ஞானந் தன்னுன் மருவிடு மாறு செய்த
பொங்குசீர்ப் பிரமா நந்தன் பொற்பதம் போற்றல் செய்வாம்.

தன்னிடஞ் சார்ந்த வொன்றைத் தன்மய மாக்குந் தீப்போல்
தன்னிடஞ் சார்ந்தார் தம்மைத் தன்மய மாகச் செய்தே
தன்னிலை யதனிற் செவ்வே தங்கிட வருள் புரிந்த
தன்மயன் பிரமா நந்தன் றனிப்பதம் போற்றல் செய்வாம்.

பரமமாம் பிரமம் மேலாப் பகர்ந்திடு குருவாய் வந்து
பரமமாம் சொரூபந் தன்னைப் பகுப்புட னுணரச் செய்து
பரமமாங் கதியை யானும் பற்றிடச் செய்த தந்தப்
பரமமாம் பிரமா நந்தன் பதமலர் மனத்திற் கொள்வாம்.

ஈசன தியல்பை யெல்லா மென்றனக் கெடுத்து ரைத்துப்
பாசம தொழிய நல்ல பரமமாம் பிரம மான
நாசமி றற்ப தத்தை நண்ணிட வருள்பு ரிந்த
மாசிலாப் பிரமா நந்தன் மலரடி மனத்திற் கொள்வாம். (46)

நரர்செயும் பாவந் தன்னை நணுகிநான் செய்யா வண்ணம்
வரமிகு கருணை யாலே வையக மதனில் வந்து
பரமநன் ஞான யோகம் பழகிடச் செய்த வந்தப்
பரமனும் பிரமா நந்தன் பதமலர் போற்றல் செய்வாம். (47)

தஞ்சைமா நகரம் போற்றத் தங்கிய பிரமா நந்தன்
தஞ்சமாம் பிரம மாகத் தங்கிட வருள்பு ரிந்து
நஞ்சினுங் கொடிதா யுள்ள நவிறரு பவமாம் நோய்க்கிங்
கஞ்சிடா திருக்கச் செய்தா னவனடி துதித்து வாழ்வாம்.

அரியதோர் வேதத் துச்சி யவிர்மகா வாக்கி யத்தால்
பரமமா முபதே சத்தைப் பகர்ந்துநற் பிரமர் தன்னை
யுரமதாய்ச் சிந்தை செய்திங் குவகையாய் வாழ வைத்த
பரமனும் பிரமா நந்தன் பதபலர் மனத்திற் கொள்வாம். (49)

எவரது பாத தீர்த்த மிப்பவ மொழிப்ப தாமோ
எவரது பாத தீர்த்த மின்புறச் செய்வ தாமோ
எவரது பாத தீர்த்த மின்னலைத் தொலைப்ப தாமோ
அவரெனும் பிரமா நந்த ரடியிணை தொழுதல் செய்வாம். (50)

மாசிணை மனத்த னாக மருவுறும் மருளன் றன்னை
ஆசிலா நல்லு ளத்தோ னாகிடக் கருணை கொண்டு
மாசிலா ஞானந் தன்னின் வயங்குறச் செய்த தூயோர்
பேசிடு பிரமா நந்தன் பிரசமென் மலர்த்தாள் போற்றி. (51)

தாக்கிடா தென்னைப் போதந் தன்னரு ளேக்கால் நீக்கித்
தூக்கமி லகண்டா நந்த சொரூபமாச் செய்தா னந்த
வாக்கினுக் கெட்டாச் சுத்த வத்துவாம் பிரமா நந்தன்
பாக்கிய மடியார்க் காகும் பதமலர் சென்னி வைப்பாம். (52)

மெய்வணத் திருவ தார்ந்த மேன்மையாம் பிரமந் தன்னில்
உய்வண மின்ப மென்று மொழிவின்றித் துய்க்க வைத்து
மெய்ம்மையா மென்னில் யானே மேவிடச் செய்தா னந்த
மெய்வணப் பிரமா நந்தன் மெல்லடிக் கன்பு செய்வாம். (53)

காரிய வுபாதி யோடு கட்டுறுஞ் சீவ பாவக்
காரிய வகைக ளெல்லாம் கழன்றிடச் செய்து பின்னர்ப்
பூரணப் பிரம மாகப் பொருந்துமா றென்னை வைத்த
சீருடைப் பிரமா நந்தன் றிருவடிக் கன்பு செய்வாம். (54)

சத்தினை யன்பாத் தம்மைச் சார்ந்தவர்க் குபதேசித்துச்
சத்தின துருவ மாக்குந் தன்மையாற் சற்கு ருப்பேர்

மெய்த்திறந் தன்னைக் காட்ட மேவிய பிரமா நந்தன்
உத்தமப் பாதப் போதை யுவந்தினி தேத்தி வாழ்வாம். (55)

அம்பர வுடையி னுன்ற வருளினு லுருவு கொண்டு
கம்பமின் மனத்த னுகக் கனசிவ மாகி நிற்க
எந்தமை யாண்டு கொண்டிங் கின்புறும் பிரமா நந்தன்
வம்புலா மலர்மென் றுளே வழுத்தியே வணங்கு கிற்பாம். (56)

எவ்வமா ருலகத் தோற்ற மிலகிடா தென்றுஞ் செவ்வே
இவ்வெலா வற்றின் மேலா விலங்கிடு பிரம ஞானஞ்
செவ்விதா யொளிரச் செய்த திருமவர் பிரமா நந்தன்
திவ்விய பாதப் போதைச் சிந்தையிற் றியானஞ் செய்வாம்.

பரமநல் லமிர்த மாகப் பகர்ந்திடு பிரமந் தன்னைத்
தெரிதர வைய மின்றித் தேர்ந்தியா னனுப வித்துப்
பரமதாங் கைவல் யத்தைப் பற்றிட வருள்பு ரிந்த
பரமமாம் பிரமா நந்தன் பதமலர்க் கன்பு செய்வாம். (58)

இச்சகந் தன்னிற் றேன்றி யிலகுறும் பிரமா நந்தன்
மெச்சுருக் குமமா மந்த மேன்மைநற் பிரமந் தன்னில்
எச்சுக விருப்பு மின்றி யினிமையாய் வாழச் செய்த
மெச்சிடு பாதப் போதை மேன்மையாய் மனத்திற் கொள்வாம்.

புன்கண மலங்க டம்மைப் பொருந்திடா வகையாய்ச் செய்து
நன்குறு முத்தி சேர நன்னெறி காட்டி யிந்த
மன்பதை யுல்கி லென்னை மயக்குறு மவித்தை நீக்கி
நன்கருள் பிரமா நந்த னகைமலர்ப் பாதம் போற்றி. (60)

பரமவா நந்த மீயும் பான்மையார் பிரமா நந்தன்
திரசனு தனமே யென்னச் செப்பிடு பிரமந் தன்னில்
வரமதா ஞானந் தந்து மருவிடச் செய்திங் கென்னைப்
பரசுக மாக வைத்தான் பதாம்புய மனத்திற் கொள்வாம்.

அன்றினர் புரமெ ரித்த வரன்மிகு கருணை யாலே
என்றமக் கருள விங்கே யெழின்மிகு பிரமா நந்தன்
என்றமெய்ப் பெயரின் வந்தா னென்றடி யார்கள் போற்றும்
நன்றருள் புரியு மன்னே னளினமென் பாதம் போற்றி. (62)

துஞ்சுத லிலாத வின்பந் துய்த்திளைப் பாறிச் செவ்வே
தஞ்சமாந் தற்ப தத்தைச் சார்ந்துயா னிற்க வென்று
மெஞ்சுத லிலாத முத்தி யெய்திடச் செய்தா னந்தத்
தஞ்சைவாழ் பிரமா நந்தன் றனிச்சரண் தலைமேற் கொள்வாம்.

தன்னிக ரில்லாச் சாந்த சற்குருப் பிரமா நந்தன்
மன்பதை யுலகி லுள்ள மக்களுக் கெல்லா நன்கே
துன்பமோ ரணுவு மென்றுந் தொடருறு தகற்றி மேலாம்
இன்பமே யளிக்க வந்தா னெழின்மிகு பாதம் போற்றி. (64)

துங்கமெய்ந் நூல்க டம்மாற் றாயதோ ருபதே சத்தை
இங்குள மனிதர்க் கெல்லா மெளிதினி லுணர்த்தி இன்பந்
தங்கிடச் செய்தா னந்தத் தனைநிகர் பிரமா நந்தன்
பொங்கெழி லுருவ மைந்த பொற்பதம் போற்றல் செய்வாம்.

முத்தரக் குணங்கண் முற்று மோதிடா திலகு மந்தச்
சுத்தநற் பிரம மாகித் தூயமங் கலமா யென்றும்
முத்தனு யிருக்கச் செய்த முதல்வனும் பிரமா நந்தன்
வித்தகப் பாதப் போதை விதியொடு தியானஞ் செய்வாம்.

தஞ்சமாம் பாதந் தந்து தகவில்யா னஞ்சி நிற்கு
நஞ்சுறு பலநோய் தன்னை நணுகிடா தொழியச் செய்து
தஞ்சைமா நகரில் வந்த தகைமிகு பிரமா நந்தன்
வஞ்சக மொழிக்கும் பாத மலரிணை வழுத்தி வாழ்வாம். (67)

என்றன தவித்தை நீக்கி யின்புரு வாக வென்னை
நன்றருள் ணேக்கா லென்று நலம்பெறச் செய்து தஞ்சை
நின்றடி யார்கள் யார்க்கு நீடருள் புரிந்து வாழ்ந்தான்
வென்றிசேர் பிரமா நந்தன் விரைமலர்த் தாள்கள் போற்றி.

பஞ்சவக் கிரப்பு லத்தின் பதைப்பற மனம டங்கப்
பஞ்சவக் கரவர்த் தத்தைப் பகுப்புட னுணரச் செய்தான்
பஞ்சவத் திரனே யான பண்புள பிரமா நந்தன்
பஞ்சவக் கறையை நீக்கும் பதமலர் போற்றி போற்றி. (69)

ஆலமார் சூல பாணி ஐயனென் பிரமா நந்தன்
சீலமார் குரவ னாகச் சிறந்ததோர் வடிவங் கொண்டு

சீலமே யில்லா வென்றன் செருக்குடை மனத்தை நீக்கிச்
சீலமே யாகச் செய்தான் றிருவடி சிரமேற் கொள்வாம். (70)

||பஞ்சவெங் கிலேச மென்னைப் பற்றிடா வகைய தாகப்
பஞ்சகோ சங்க டந்த பரமமாம் பிரமா நந்தன்
அஞ்சுவை யமிர்த மொப்ப வழகிய வாக்கி யத்தால்
எஞ்சிடா தொழியச் செய்தா னிணையடி தொழுதல் செய்வாம்.

கூடமாம் பிரம மாகக் கூடிடு மாறு நன்கே
கூடமாம் ஞானந் தன்னைக் குறிப்பினா லுணர்த்தி யிங்கே
நீடிய பாவ மெல்லாம் நீக்கிய பிரமா நந்தன்
பீடுய ரடியா ருள்ளம் பிறங்கிய மலர்த்தாள் போற்றி. (72)

உன்னருந் தவத்தின் மிக்க வுயர்வுறு பிரமா நந்தன்
பின்னமார் துவிதமின்றிப் பிறங்கிடு பிரமந் தன்னில்
என்னது மனமொ டுங்கி யெழில்பெற நிற்கச் செய்தான்
தன்னிக ரில்லா வன்னோன் றனிமலர்ப் பாதம் போற்றி. (73)

அகன்றிடு நாம ரூப மணைவுரு தாக்கி யென்னைப்
புகன்றிடாச் சுகரூ பத்தில் பொலிவுறப் பொருந்தி யென்றும்
அகன்றிடா திருக்கச் செய்த அருள்மிகு பிரமா நந்தன்
அகமகிழ் பாதப் போதை யனுதினஞ் சிந்தை செய்வாம்.

---

||பஞ்சவெங்கிலேசம்=ஐந்து கொடிய கிலேசம்.

அதாவது:—(1) அவித்தை. (2) அஸ்மிதை. (3) இராகம். (4) துவேஷம். (5) அபினிவேசம்.

[1] விசாரித்து பார்க்குமிடத்து எது இல்லாமல் போகிறதோ அது அவித்தை.

[2] ஆத்ம மனதுக்களின் ஒருமையுணர்ச்சி அஸ்மிதை.

[3] அநுகூல பதார்த்தத்தின் ஞானத்தாலுண்டாகும் புத்தி விருத்தி இராகம்.

[4] பிரதிகூல பதார்த்தத்தின் ஞானத்தாலுண்டாகும் புத்தி விருத்தி துவேஷம்.

[5] மரணபயத்தால் சரீரத்தை ரக்ஷித்தலிலுண்டாகும் ஆக்கிரகம் அபினிவேசம்.

மங்குறு புத்தி யுள்ள மக்கண்மீ திரக்கங் கொண்டு
பொங்குபே ரளியின் மேலாய் போற்றும் பிரமா நந்தன்
அங்கவர் பவத்தின் மீண்டு மணுகாமற் கரைய தேற்றித்
துங்கமாய் வாழச் செய்தான் றுணைமலர்ப் பாதம் போற்றி.

குத்திரப் பாவ மெல்லாங் குலைந்திட வெனக்குச் செவ்வே
எந்துய ரில்லா முத்தி யீந்திடுங் காசி தன்னில்
சுத்தமாங் கங்கை நீராற் றூய்மையைச் செய்தா னந்த
உத்தமப் பிரமா நந்தன் உயர்வுறு பாதம் போற்றி. (76)

மறையின தந்த மாக வழங்குப நிடதந் தன்னால்
குறைவிலா விஞ்ஞா னத்தாற் கோதின்றிப் பொருடு ணிந்து
நிறைபரி பூர்ண மாக நேர்ந்திட வென்னைச் செய்த
அறிவருள் பிரமா நந்த னடிமலர் துதித்தல் செய்வாம். (77)

அளக்குதற் கரிதயா யெங்கு மகண்டிதா கார மான
விளக்கெனத் தோன்றி நன்று விளங்கிடும் பிரமா நந்தன்
அளக்கரும் பிரமந் தன்னை யவனியி லுள்ளோ ரெல்லாம்
உளத்தினி லுணரச் செய்தா னுயர்வுறு பாதம் போற்றி. (78)

தவமிகு பிரமா நந்தன் றரணியி லுள்ளோர்க் கெல்லாம்
பவமது நீக்கி மேலாம் பத்தியை யளித்துச் செவ்வே
நவையிலா வின்பந் தன்னை நன்கருள் செய்தா னன்னான்
உவமையில் பாதப் போதை யுயர்வுற மனத்திற் கொள்வாம்.

ஈண்டுபே ருலகில் வந்த வினிமையாம் பிரமா நந்தன்
பூண்டதோர் பவத்தி னின்றும் புகரிலா முத்தி தன்னில்
மீண்டிடும் வகைய தான மேன்மையா முபதே சத்தால்
மாண்புற வாழச் செய்தான் மலரடி போற்றி போற்றி. (80)

தவமுளோர் வணங்கத் தக்க தகையுடைப் பிரமா நந்தன்
பவமதை யொழிக்க வெண்ணிப் பகர்தரு முத்தி தன்னைப்
புவிமதி லுள்ளார் யார்க்கும் பரிவுட னளித்துச் செவ்வே
பவமதை நீக்கி யாண்டான் பதமலர்க் கன்பு செய்வாம். (81)

முடிவிலாப் பொருளா யுள்ள மூர்த்தியாம் பிரமா நந்தன்
மடியுடை மனத்தி னேற்கு வஞ்சக மாயை தன்னை

கொடியினி லொழித்து நன்கே நுவலரும் பதத்திற் சேர்த்தா
னடிமலர்க் கன்பு செய்திங் கனுதினம் வணங்கி வாழ்வாம்.

துளங்குபே ரருளி னாலே தோன்றிடும் பிரமா நந்தன்
களங்கமார் மனத்தி னர்க்குக் கருணையி னாலே யுள்ளக்
களங்கமா மதனைப் போக்கிக் கரையிலா வின்பந் தன்னை
விளங்குறச் செய்தா னன்னோன் விரைமலர்ப் பாதம் போற்றி.

நிறைபரி பூர்ண மாக நிகழ்வுறு பிரமந் தன்னை
மறையினற் பொருளாற் செவ்வே மருவிட வைத்து நன்கே
குறைவிலா முத்தி தன்னைக் குறுகிடச் செய்ய வந்த
திறமுடைப் பிரமா நந்தன் சீரடி போற்றல் செய்வாம். (84)

படிபுகழ் பிரமா நந்தன் பாமரர்க் கெல்லா மிங்கே
மடமிகுந் தன்மை போக்கி வயங்குபே ரறிவுண் டாக்கித்
தடமுறு ஞானந் தன்னைத் தந்தருள் செய்தா னன்னோன்
அடலுறு பாதப் போதை யன்பொடு மனத்திற் கொள்வாம்.

ஒத்துள மொடுங்கி யெப்போ துன்மனீ பாவ மாமோர்
அத்திறக் காலத் தஃதே யடைபர பதம தென்று
மெய்த்திறப் பிரமா நந்தன் மேன்மையா முபதே சத்தால்
அத்திற மடையச் செய்தா னவனடி துதித்து வாழ்வாம்.

மதமுதற் குணங்க ளில்லா மாதவப் பிரமா நந்தன்
இதவுப தேசந் தன்னா லிங்குளா ரெவர்க்குஞ் செவ்வே
மதமுதற் குணங்க ளெல்லா மாய்வுறப் போக்கி மேலாம்
பதமுறச் செய்தா னன்னோன் பதமலர் முடிமேற் கொள்வாம்.

தீதுள மலத்தைப் போக்கிச் சிறந்திடு முத்தி தன்னை
மேதினி யமர்வோ ரெல்லா மேவிட வருள்பு ரிந்த
போதகப் பிரமா நந்தன் பொன்னடிக் கன்பு செய்து
பாதகம் நீக்கிச் செவ்வே பராநந்த மாக வாழ்வாம். (88)

பூச்சிய மாக மேலோர் புகழ்ந்திடு பிரமா நந்தன்
வாச்சிய மதனிற் கெட்டா மகிமைசேர் பிரமந் தன்னில்
மீட்சியில் இலட்சி யார்த்தம் விளங்கிட வருள்பு ரிந்தான்
மாட்சிமை யுள்ள வன்னோன் மாண்புறு பதங்கள் போற்றி.

அந்தமில் சம்பு வான வழகுறு முமையாள் பாகன்
எந்தமைக் காக்கும் வண்ண மெழிற்குரு வாகி வந்து
சந்தத மானந் தத்தில் தங்கிட வருள்பு ரிந்தான்
அந்தமம் பிரமா நந்த னடிமல ரகத்துள் வைப்பாம். (90)

அத்துவி தந்தீ தென்றிங் கறைந்திடு மவர்க டம்பால்
எத்தனை விதத்தி னுலு மிணங்கியா னிருக்கா வண்ணம்
அத்துவி தத்தின் கண்ணே வமர்ந்திட வருள்பு ரிந்த
உத்தமப் பிரமா நந்த னுயர்வுறு பாதம் போற்றி. (91)

மொழிதரு முபதே சத்தால் மோகமா மவித்தை நீக்கிப்
பழிமிகு பாவ மெல்லாம் பாறிடச் செய்து நல்ல
அழிவிலா வின்ப முத்தி யளித்திடும் பிரமா நந்தன்
பழிதபு பாதப் போதைப் பாங்குற மனத்திற் கொள்வாம்.

மாதவப் பிரமா நந்தன் மானிடர் பிறவிப் பௌவம்
மேதகு கருணை யாலே மேதினி யடையா வண்ணம்
காதலோ டொழியச் செய்தான் கவினுறு மவன்றாள் செவ்வே
ஆதர வோடு நின்றே யனுதினஞ் சிந்தை செய்வாம். (93)

காமமே முதலாந் துட்டக் களங்கங்க ளொழித்துச் செவ்வே
தாமமாம் வீட்டி லென்னைத் தங்கிட வருள்பு ரிந்து
மேன்மையா மின்பந் தன்னை மேவிடச் செய்ய வந்த
நாமமார் பிரமா நந்த னறுமலர்ப் பாதம் போற்றி. (94)

உன்னதப் பிரமா நந்த னுலகினி லுள்ளோர்க் கெல்லாம்
பின்னமி லத்வை தத்தால் பேதைமை நீக்கி நன்கே
உன்னரு மின்பந் தன்னை யுயர்வுட னளிக்க வந்தான்
அன்னவன் பாதப் போதை யமைவுடன் மனத்திற் கொள்வாம்.

*ஆதப முள்ளோர்க் கெல்லா மருள்செயும் பிரமா நந்தன்
வேதவா கமங்க ளோதும் விளங்குபல் லுத்தி தம்மால்
ஏதமி லின்ப முத்தி யெளிதினி லடையச் செய்தே
ஆதப நீங்கச் செய்தா னவன்றிருப் பாதம் போற்றி. (96)

---

*ஆதபம்=வெப்பம். காமக்குரோதங்களாலாகும் வெப்பமெனப் பொருள்கொள்க.

பகவனும் பிரமா நந்தன் பதமலர் சிரத்திற் சூட்டி
அகமுக மாக்கி யுள்ள மசைர்திடா திருக்கச் செய்து
புகல்புர மூன்றும் போக்கிப் பொருந்திட் டின்பந் தன்னில்
தகவுட னிலைக்கச் செய்தான் றாண்மலர்க் கன்பு செய்வாம்.

மாலொடு கங்கை திங்கள் மற்றுள வெல்லா நீத்து
மானிட வடிவாய் வந்த மாட்சியார் பிரமா நந்தன்
மானிடர் துன்ப நீக்கி மாய்விலா வின்ப மென்னும்
தானம தளித்தா னன்னோன் றாண்மலர் போற்றல் செய்வாம்.

பவமுதல் வியாதி தீர்க்கும் பண்புள பிரமா நந்தன்
இவைகளின் வேறா யென்று மிலகுறு பிரமந் தன்னை
நவையிலா வாக்கி யத்தால் நண்ணிடச் செய்திங் கென்னை
பவமதை யொழிய வைத்தான் பதமலர் போற்றி வாழ்வாம்.

பாரில்வே தாந்த மெங்கும் பரவிட நூல்கள் செய்து
தாரதம் மியம தில்லாத் தகையுடை மனத்தி னேற்குச்
சீரதா யுபதே சித்துச் சிறப்பினை யடையச் செய்த
பேரருட் பிரமா நந்தன் பிரசமா மலர்த்தாள் போற்றி. (100)

பாரிடை வந்த வெங்கள் பரமனும் பிரமா நந்தன்
சீருடைப் பாத மென்றன் சிரத்தினிற் சூட்டி நன்கே
பேரிரு ளவித்தை நீக்கிப் பேரின்ப மதனி லென்னைப்
பாரிடை வாழச் செய்தான் பதமலர் போற்றி போற்றி.

முற்றிற்று.

பாங்கின்இத் தோத்தி ரப்பா படிப்பவர் கேட்போர் வாழ்க
ஈங்கிதன் பொருளு ணர்ந்திங் கின்புறுஞ் செல்வர் வாழ்க
ஓங்கிய மறைக ளுன்து மூலகினி லென்றும் வாழ்க
தீங்கிலெங் குருவின் செய்ய திருவடி வாழ்க வாழ்க.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | 8 | சரணங் | சரணங்க |
| 8 | 8 | பதபலர் | பதமலர் |
| 9 | 21 | யுல்கி | யுலகி |
| 12 | 13 | கரிதயா | கரிதா |
| 12 | 18 | பத்தினை | பதத்தினை |